# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2019.07.12 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# மரண தண்டனையை இல்லாதொழித்தல்

*(தனியார் உறுப்பினர் சட்டமூலம்)*

**மரண தண்டனையை இல்லாதொழிக்கவும் அதனோடு தொடர்புடைய ஏற்பாடுகளை செய்வதற்குமானதொரு சட்டமூலம்**

காலி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ பந்துல லால் பண்டாரிகொட அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## மரண தண்டனையை இல்லாதொழிக்கவும் அதனோடு தொடர்புடைய ஏற்பாடுகளை செய்வதற்குமானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்.*

**1**. இச்சட்டம் , 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, மரண தண்டனையை இல்லாதொழித்தல் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*மரண தண்டனையை இல்லா தொழித்தல்.*

**2**. ஏதாவது ஒரு சட்டத்தில் மரண தண்டனையை விதித்தல் அல்லது மரண தண்டனையால் தண்டனை அளித்தல் என்று கூறப்பட்டிருப்பது இச்சட்டம் அமுலுக்கு வந்த உடனும் அதன் பின்னரும் வாழ்நாள் சிறைத்தண்டனை மூலம் தண்டனை அளித்தல் என திருத்தப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்

*நிலைமாறுகால ஏற்பாடுகள்.*

**3**. (அ) இச்சட்டம் அமுலுக்கு வரமுன்னர் மரண தண்டனை வழங்கப்பட்டிருக்கும் எந்த நபரும் அக்குறித்த குற்றத்திற்காக வாழ்நாள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டவராக கருதப்படுதல் வேண்டும்.

(ஆ) இச்சட்டம் அமுலுக்கு வரமுன்னர் ஆளொருவர் மரண தண்டனை வழங்கப்படக்கூடிய குற்றமொன்றை புரிந்து, அதற்கான தண்டனை நீதிமன்றத்தினால் இன்னும் வழங்கப்படாமலிருந்தால் அந்நபர் வாழ்நாள் சிறைத்தண்டனைக்குரிய குற்றமொன்றை புரிந்தவராக கருதப்படுதல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.